**அக்டோபர்: 01**

**நானே (இயேசு) மெய்யான திராட்சை செடி; நீங்கள் கொடிகளாயிருக்கிறீர்கள்.**

**வாசிக்க: யோவான் 15:1-8**

நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார், கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன், கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள். நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான், அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள், அவைகள் எரிந்துபோம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.





ஹலோ ஹலோ செல்லங்களா, இயேசப்பாவின் சீஷர்களை மூன்றரை வருடமாக அவரோடு இருந்து ஊழியம் செய்ய பழகிவிட்டனர். இப்போது அவர் மாமிச சரீரத்தை விட்டு புறப்பட்டு பரலோகம் செல்லபோகிறார். இனி சீஷர் இயேசப்பா கூட இல்லாமல் (சரீர உடலுடன் பூமியில்லாமல்) எப்படி கனிதரும் வாழ்வை வாழவேண்டும் என கற்று தரவேஇந்த உவமையை சொன்னார். நானே மெய்யான திராட்சை செடி. நீங்கள் என்னில் இருக்கும் கொடிகளாயிருக்கிறீர்கள். செடியில்லாமல் கொடி தனியாக கனிதர முடியாது. கொடியானது தனக்கு தேவையான உணவுசத்தை செடியில் இருந்து எடுத்து கொள்கிறது. கொடி செடியில் இணைந்துள்ளவரை தான் இது சாத்தியம். செடியைவிட்டு பிரிந்தால் உலர்ந்து ஒன்றுக்கும் உதவாமல் போய் விடும். நாம் இயேசுவோடு நிலைத்திருந்தால் தான் கனிதரும் வாழ்வை வாழமுடியும். அப்படியென்றால் நாம் எப்படி இயேசுவில் நிலைத்திருப்பது?

1) அனுதினமும் அவரோடு ஜெபத்தில் பேசவேண்டும். அவரை நம் இருதயத்தில் அழைத்து, நம் சிந்தனை, வார்த்தை, செயல்களை ஆளுகை செய்ய கேட்கவேண்டும். அதுவே உண்மையான ஜெபம்.

2) அவருடைய சத்தத்தை அனுதினமும் கேட்கவேண்டும். அவர் மூன்று விதத்தில் பேசுகிறார். அ) நேரடியாக தரிசனத்தில் ஆ) தம்முடைய ஊழியர்கள் மூலமாக இ) தாம் ஏற்கனவே பேசிய வேதத்தின் வழியாக. இதில் அதிகமாக பேசுவது வேதத்தின் வழியிலே. ஆகவே, அனுதினமும் வேதத்தை தியானிக்க அர்பணிக்க வேண்டும். இப்படி நாம் வாழ்ந்தால், இயேசப்பா நம் கூட இல்லாமல் போனாலும், நமக்குள்ளே எப்போதுமிருப்பார். நாம் அவரிலும் அவர் வார்த்தை நம்மிலும் நிலைத்திருக்கும் போது நாம் எதை கேட்டாலும் அதை நாம் பெறலாம்.

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான், யோவான் 15:5

**<u>ஜெபம்</u>**

மகிமையான பரலோக தந்தையே, உங்களோடு வாழும் வாழ்க்கையை எனக்கு கற்று தந்தமைக்காக நன்றி. அதை அனுதினமும் கடைபிடிக்க ஆவியானவர் என்னை நடத்தும்படி இயேசுவின் நாமத்தில் அர்பணித்து ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

